**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.149** **நாள் : 12.11.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சி – வரி வசூலை ரொக்கமாக பெற சிறப்பு ஏற்பாடுகள் – ஆணையாளர், முனைவர் தா. கார்த்திகேயன் அவர்கள் அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி மற்றும் இதர வரிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் பொது வசூல் மையங்கள், மாநகராட்சி வரி வசூலிப்பாளர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மையத்தின் பொது சேவை மையங்களில், காசோலை மற்றும் வரைவோலை மூலமாகவும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தவிர்த்து, மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட 11 வங்கிகள் மற்றும் சென்னை மாநகரில் உள்ள அவற்றின் கிளைகள் மூலம் (இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கரூர் வைசியா வங்கி, எச்.டி.எப்.சி வங்கி, ஐ.டி.பி.ஐ. வங்கி, கனரா வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, கொடாக் மகேந்திரா வங்கி, லஷ்மி விலாஸ் வங்கி, எஸ் வங்கி, மற்றும் இன்டஸ் இன்ட் வங்கி) – Walk-in Payment – காசோலை, வரைவோலை மற்றும் ரொக்கமாகவும், மேலும், மாநகராட்சி இணையதளம் மூலமாகவும் மாநகராட்சி வரிகளை பொதுமக்கள் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுமக்களிடம் வரிகளை நேரடியாக ரொக்கமாக வசூல் செய்யும் வழக்கத்தை ஜனவரி 2002 ஆம் ஆண்டே நிறுத்தி விட்டது. இருப்பினும், மேற்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக ரொக்கமாக செலுத்த இன்று வரை வழிவகை இருந்து வருகிறது.

தற்போது மத்திய அரசு பழைய ஆயிரம் (ரூ.1000/–) மற்றும் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் (ரூ.500/–) செல்லாது என அறிவித்துள்ள நிலையில், பொதுமக்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய வரி / கட்டணங்களை செலுத்துவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு, மேற்கண்ட வரி/கட்டணங்களை பழைய ஆயிரம் (ரூ.1000/–) மற்றும் ஐநூறு ரூபாய் (ரூ.500/–) நோட்டுக்களை பயன்படுத்தி 14.11.2016 வரை செலுத்தலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் நலன்கருதி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி மற்றும் இதர வரிகளை ரொக்கமாக வசூல் செய்ய சிறப்பு

ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையகம், அனைத்து மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நடத்தப்படும் சேவை மையங்களில் அமைக்கப்பட்டுள்ள முகப்புகளில் **(Counter)** பழைய ஆயிரம் (ரூ.1000/–) மற்றும் ஐநூறு ரூபாய் (ரூ.500/–) நோட்டுக்களாக(ரொக்கமாக) பொது மக்கள் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த சிறப்பு முகப்புகள் 13.11.2016 மற்றும் 14.11.2016 ஆகிய நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயல்படும்.

<u>சிறப்பு முகப்புகளின் விவரங்கள்</u>

| | | |
|---|---|---|
| 1. | 200 வார்டு அலுவலகங்கள் 1 முகப்பு வீதம் | 200 முகப்புகள் |
| 2. | 15 மண்டல அலுவலகங்களில் 2 முகப்புகள் வீதம் | 30 முகப்புகள் |
| 3. | தலைமையகம் (ரிப்பன் மாளிகை) | 3 முகப்புகள் |
| 4. | <u>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன சேவை மையங்கள்</u> | |
| | 15 மண்டல அலுவலகங்களில் 2 முகப்புகள் வீதம் | 30 முகப்புகள் |
| | தலைமையகம் (ரிப்பன் மாளிகை) | 2 முகப்புகள் |
| | 179 வார்டு அலுவலகங்களில் 1 முகப்பு வீதம் | 179 முகப்புகள் |
| | 1 வார்டு அலுவலகத்தில் 2 முகப்புகள் (வார்டு–44) | 2 முகப்புகள் |
| | | 446 முகப்புகள் |

எனவே, பொது மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி, இதர வரிகள் அனைத்தையும் 14.11.2016 க்குள் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பான புகார் / சந்தேகங்களுக்கு 1913 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**